ஸ்ரீராம்



# ஆஞ்சநேயரின் அருட்பாமாலை

# கும்மிப்பாடல்கள்

ஆக்கம்: கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஆஞ்சநேயரின் அருட்பாமாலை

# கும்மிப்பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம்



நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம வென்றிரண்டெழுத்தினால்.

# ஆஞ்சநேயரின் அருட்பாமாலை
# கும்மிப்பாடல்கள்

ஆக்கம் :


**புலவர் நாகமணி விநாயகமூர்த்தி**

சேனைக்குடியிருப்பு

10-05-2017

விலை 350




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெராம்



## ஆஞ்சநேயர் காயத்ரி

ஓம் ஆஞ்ச நேயாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தந்நோ ஹநுமாந் ப்ர சோதயாத்

புத்தியும் பலமும் தூய
புகழொடு துணிவும் நெஞ்சில்
பக்தியும் அச்ச மில்லாப்
பணிவு நோய் இல்லா வாழ்வும்
உத்தம ஞானச் சொல்லின்
ஆற்றலும் இம்மை வாழ்வில்
அத்தனை பொருளும் சேரும்
அனுமனை நினைப்பவர்க்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## ஸ்ரீ அனுமன் காயத்திரி

ஓம் ஆஞ்சனேயாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தந்நோ ஹநுமாந் ப்ர சோதயாத்

## காப்பு

அரிகரி ராம தூதன் அஞ்சலை மைந்தன் மீது
துரிகிடப் பக்தி கொண்டு மனத்துணர்வுடன் அகவல் பாட
பரிதிடர் போக்கி நித்தம் பங்கயன் சிவனின் மூத்த
கரிமுகக் கணபதி எம் கஜமுகன் காப்புத்தானே

## அகவல்

ஓம் அரிகரி ராமா அயோத்தியின் ராமா
முரகரி முகுந்தா மூவர்கள் தலைவா
ஸ்ரீநமோ தேவா செங்கண் மாலே
உனை முதல் நினைந்தேன் ஓடிவா ராமா
வாய்வு புத்திரா வானவர் தலைவா
கேசரி மகனே ஈஸ்வரன் துணையே
வேதானந்தனே விஸ்ணுவின் தூதா
அரிஸ்பரனே அனுமந்த தேவா
ராஜகுமார ராமோதரனே
துளசி சீலனே சுந்தரேசனே
மணிவண்ணனே ஒளிவண்ணனே
சிவனின் ஒளிதனில் சேர்ந்து வளர்ந்தவா
அரனே பரனே ஆபத் பாந்தவா
கருணைக் கண்ணா கடாட்ஷம் அருள்வாய்
சூரியன் தன்னைச் சூக்குமமாக
மாங்கனி என்று வானில் சென்றவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டல மாலை கொண்டு பிறந்தவா
வண்டார் கடம்பு துளசி மாலை அணிந்தவா
வெற்றிலை மாலை விரும்பி அணிந்தவா
அருச்சுனன் தேர்க்கொடி கொண்டு பறந்தவா
அனுமந்த தேவனே எமையாளவா துரையே
வாய்வு புத்திரா மாருதி வருக
பவள புத்திரா பஞ்சய சகானா
தேவகுமார சிறிராம தூதா
ஆதவன் கர்வம் அடக்கி வைத்தவா
வச்சிரத் தேக மன்னா வருக
உச்சியில் கல்லை ஒன்றாய் அடுக்கி
சனி ஈஸ்பரனை சகிக்க வைத்தவா
உன்னடியாரை ஒன்றும் செய்யேனென
கூறிட வைத்த நற்குணமுடை அழகா
நாடி வந்தெம்மை நலமுடன் காப்பாய்
ஓடிவா துரையே உமையின் உருவே
துள்ளிக் குதித்து சுந்தரா வருக
மந்தர கிரியை வாரி எடுத்தவா
அந்தரம் தன்னில் ஆழி கடந்தவா
எந்தன் இடர்கள் எல்லாம் நீக்கி
உந்தன் கடாட்சம் ஒளிவிட அருளே
வந்தனை செய்தேன் வாம தேவனே
நந்தா முகுந்தா நரசிம்ம தூதா
செந்தாமரையுறை சேயினை பாதம்
போற்றித் துதிக்கும் புண்ணியா வருக
அகத்தில் புன்னகை அழியா நாமம்
எதிர்க்கும் புயத்தோய் எம்மான் வருக
மதிக்கும் அடியார் மனதிற் கொண்ட
அதிவேக ராஜா அனுமான் வருக
வீரநடை கொண்ட வீரா வருக
கேசரி நந்தா கிரிடி வருக
தண்டாயுதத்தொடு சாமி வருக
குண்டலம் காதில் கொண்டோய் வருக
பண்டு தோசம் பல பல வினையும்
மண்டு மனையில் மறா ஏவலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுணி கோளும் கொல்லும் பகையும்
அண்டி நெருங்காது ஆஞ்ச நேயனே கார்
உந்தன் நாமம் உரைத்தேன் ஜெய் அனுமான்
வந்து குடி கொள்ளும் மன்னவராசா
மனதில் மமதை மறைந்து அகல
துதித்தேன் துரையே தூய்மை நிறையருள்
வீரகெம்பீரா விண்ணவர் அளைக்கார்
ராமதூதனே சடுதியில் வருக
சீதையைக் கண்ட சேயோய் வருக
வாதைப் படுத்தும் வல்லினை நோயும்
காது கண்வலி கைகால் பிடிப்பு
மூச்சி இருமல் முழங்கால் வாதம்
காய்ச்சல் களிச்சல் கலையாத் தலையிடி
வீக்கம் பெருமல் விறைப்பும் சொறியும்
பித்தமும் சத்தி பெருவயிறுாதலும்
பல்வலி தொண்டை பருவலும் கம்மலும்
உடம்பு நடுக்கம் உணர்விலா நிலையும்
சஞ்சீலி கொண்டு சகல நோய்களையும்
மாற்றிடு மாருதி மயக்கம் தீர
காற்று வேகமாகக் கடலைக் கடந்து
அசோக வனத்தை அழித்துப் பிடிங்கி
குதித்துத் தாவி குன்றை அசைத்தவா
மதிப்பவர் மனதில் மாருதி இருப்பாய்
துதித்தேன் சுந்தரா தாய்சொல் தட்டாதவனே
ஓடிவா துரையே உள்ளன்புடனே
சீதை மனதில் திகழும் சோதி
ஸ்ரீராம நாமம் தனை மறவாதவனே
முந்தை வினையும் முன்வரு இடர்களும்
உந்தன் நாமம் உரைக்க ஓடிடும்
வாவா மாருதி மன்னவன் மகனே
முப்பழம் பாலும் முளைவிடு பயறும்
கப்பல் கதலி கடலை இளநீர்
அப்பம் அவலும் அரிசி வெண் தயிரும்
செந்தூரத் தேனும் சீனி சக்கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிப் படைத்து உன் பூசையில் வைத்தேன்
வந்து அருந்திடு மாருதி ராசா
குற்றம் குறைகள் ஏது இருப்பினும்
மனது பொறுத்து மைந்தன் எந்தனை
அருள் முகம் காட்டு அஞ்சலை மகனே
இருளை அகற்றி என் மனத்துள்ளே
அருள் ஒளி புரிவாய் ஆஞ்சநேயனே
எதிரிகளாலே என் மேல் பகையால்
தறிபட்டு நிற்கிறேன் தற்காத்திடுவாய்
பிடிபிடி அனுமான் பிரமன் ஆணை
அடிஅடி முறிமுறி அஞ்சலையாணை
சுற்றிக் கட்டு சுந்தரா வாலால்
இணைத்துக் கட்டு என் எதிரி இவனை
பாதகன் தனக்கு பரிவு காட்டாதே
வஞ்சகன் உன்னை மறித்து இருக்கான்
வெஞ்சினம் கொண்டு மேலெழுந் தோடிவா
அஞ்சனை மையால் ஆராய்ந்து பிடி
மாற்றான் இடத்தில் மயங்கி நில்லாதே
அவன் சொல்லுக்கு அடி பணியாதே
இங்கே வந்தென் திடர்களை அகற்று
அடியேன் எனக்கு ஆதரவாக
குடிகொண்டிருந்து குணமுடன் காப்பாய்
காக்க காக்க கருணைக் கடலே
வாக்கு வன்மையும் மாருதி தருவாய்
சிவமே திருவே ஜெயமே சரணம்
ராம தூதனே ரகுபதி சரணம்
தர்மக் கொடையும் தருவாய் சரணம்
அதர்மம் அழிக்கும் அரிகரி சரணம்
திருராம தூதா ஸ்ரீஆஞ்சநேயா
உமை போற்றுகின்றோம் உள்ளன்போடு
சரணம் சரணம் தங்க மாருதி
எங்கும் நிறைந்த இராகவா சரணம்
சரணம் சரணம் ரகுபதி ராமா சரணம்

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

## காயத்திரி

ஓம் தாமோதராய வித்மஹே
ருக்மணி வல்லபாய தீமஹி
தந்நோ கிருஷ்ண ப்ரசோதயாத்

## துதி

கருணைக் கடலாம் கணபதியைக் கருத்தில் நினைந்து எள்ளாளும்
அவனே முதல்வன் ஆகமத்தில் ஆதலால் நாமும் - உமை மகனை
மதித்து போற்றிப் பாமாலை மாறாதருளே பெருகவென
துதித்தோம் தொந்தி வயிற்றோனே துணைதந்தருள்க கணபதியே

## பாமாலை

1. கற்பனைக்கு அடங்காத கருணை சோதி
கருதுகின்ற அடியவர்க்கு அருளும் சோதி
பொற்பதியோம் உகந்தை பதி கோயில் கொண்ட
புகழ் ஐந்து கரமுடைய புனித சோதி
அற்புதங்கள் அடியவர்க்கு காட்டி நாளும்
அருள் மழைகள் சொரிந்தருளும் அமிர்த சோதி
சொற்பதித்து ஆஞ்சநேயர் மேல் பாமாலை பாட சுவாமி
துணைபுரிந்து அடியார்க்கு அருள் செய்வாயே

2. காளிங்கன் பஞ்சணையில் பள்ளி கொள்ளும்
கண்ணனே ரகுராமா வெங்கடேசா
ஊழிமுதல் உலகத்தை ரெட்சித்தாளும்
உத்தமனே வைகுந்தா பச்சை வண்ணா
ஆழியெனும் பாற்கடலில் மச்ச மான
அச்சுதா பரந்தாமா அயோத்தி ராம தூதன்
பாரினிலே அடியாரை அணைத்து ஆளும் ஸ்ரீ
பஞ்சமுக ஆஞ்சநேயரைப் பணிகுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கிங்கிணியும் தண்டைகளும் காலில் கொஞ்ச
கிண்ணவரும் தேவர்களும் உன்னை மெச்ச
அன்னையவள் ஆஞ்சலை தன் மனமுமஞ்ச
அண்ட பகிரண்டமொடு அனைத்தும் மேலாய்
கொண்டலொடு சூரிய நம் குழந்தை உன்னை
கொடுங் கோபம் கொண்டு மன மகிழ்ந்தாரையா
அண்டி வந்தோர்க் கபயகரம் அளிக்கும் தேவா-ஸ்ரீ
பஞ்சமுக ஆஞ்சநேயா அருள் செய்வாயே

4. கீதை தனை உரைத்திட்ட மாயோன் தூதா
கிலேசமுற்றுறேன் உனைக்காண ஆவல் கொண்டேன்
பாசவினை பந்தத்தால் பல நாட்களாகப்
பல தடைகள் எதிர் நோக்கக் கண்டேனையா
மாருதியே மனம் வைத்து ஏழை எந்தன்
மன இருளைப் போக்குதற்கு கருணை செய்வாய்
சாரதியாய் ராமனுக்கு துணை கொண்டோனே - ஸ்ரீ
பஞ்சமுக ஆஞ்சநேயா அருள் செய்வாயே

5. குன்றெறிந்த மழை தடுத்த கோபாலன் தன்
குணநியே கேசரி தன் மகனே வா வா
அன்று நீ இராமருக்காய் சிரஞ்சீவி தேடி
அகழ்ந்தெடுத்து மலையோடு கொண்டு வந்தாய்
இன்றெமக்கு நின்ற நிலையாக நின்று
ஈரைந்து கரம் கொண்டு அணைத்துக் காரும்
அஞ்சலையின் தன்மகனே அரிராம தூதா- ஸ்ரீ
பஞ்சமுக ஆஞ்சநேயா அருள் செய்வாயே

6. கூர்மமொடு அஸ்வமுகம் கொண்ட நாதா
கொடுமை கொண்ட இரணியனை வதைத்த சிங்கா
பார் போற்றும் பகவானே கெருடகேசா
பண்பான அஞ்சலைக்கு மகனும் மானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் பூத்த மணிவண்ணா கடலைத் தாண்டி
கணையாழி கொடுத்தவனே ஸ்ரீராம தூதா
சீர் பூத்த பஞ்சமுக ஆஞ்சநேயா ஐயா- உன்
திருவடியை அனுதினமும் பணிகுவோமே

7. கர்வமது கொண்டிருந்த இராவணன் தன்
கெடு முடியும் படை பலமும் அழித்த ராமா
திடமான சடாயு தன் இறக்கையின்றி
திகள் எதிரே உயிர் விடக் கண்ட ராமா
அடைவாக வாலிவதம் செய்த ராமா
அன்று குகன் தன் பெருமை கண்ட ராமா
படை பலவும் ராஜமுடி துறந்த ராம தூதனான ஸ்ரீ
பஞ்சமுக ஆஞ்சநேயனைப் பணிகுவோமே

8. கேசவனே மாதவனே வெங்கடேசா
கிருபாகரா மனோகரா துளசி ராமா
யாதவர்கள் சேரியிலே வளர்ந்த கண்ணா
யசோதை உன் தாய் மடியில் புரண்ட மாயா
சீதையர்க்காய் தன் மனதை திடம் படுத்திக் கொண்டு
சிலை வளைத்து மணமாலை இட்ட கோதண்டராமா
ராதை தன் இதயத்தில் ஒளி கொண்ட ராம தூதனான -ஸ்ரீ
பஞ்ச முக ஆஞ்சநேயனைப் பணிகுவோமே

9. கைகேயி மனமாற்றத்தின் காடு சென்று
கடும் துயரமடைந்த ஸ்ரீராம ராமா
மாரிசன் சூழ்ச்சியினால் மான் பின்னாக
மனைவி தன் சீதைக்கு இசைந்த ராமா
ஆனதம்பி லெட்சுமணனை அருகிருத்தி
அம்மானின் பின் சென்ற அயோத்தி ராமா
பாதைவழி தெரியாது பதைத்த ராம தூதனான-ஸ்ரீ
பஞ்சமுக ஆஞ்சநேயரைப் பணிகுவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கொடுமுடியை தகத்தெறிந்த குபேர ராமன்

குஞ்சரிக்கு அபயகரம் கொடுத்த ராமன்

விடதூதர் கண்டஞ்சும் விண்ணுலக ராமன்

விண்ணவர்கள் போற்றுகின்ற மாய ராமன்

அடம்பொழிய மழை தடுத்த அயோத்தி ராமன்

ஆகாயம் பூமி முதல் அனந்தராமன்

பராபரமாய் அருள் ஒளியாய் நின்ற ராமதூதனான- ஸ்ரீ

பஞ்சமுக ஆஞ்ச நேயரைப் பணிகுவோமே

11. கோவுகளை மேய்த்திட்ட மாய ராமன்

கோபிகளின் துகில் எடுத்த சிறு கன்னிராமன்

மாதவனான் யாதவற்கு மண்ணையுண்ட

மாபலியை சிறை வைத்த வாசு தேவராமன்

தீயவரை அழித்து தர்ம செங்கோல் நாட்ட

செகமீது புவன ரட்கனாய் விளங்கும் ராமன்

பாராளும் ஸ்ரீராம நாராயணன் தூதனான- ஸ்ரீ

பஞ்சமுக ஆஞ்ச நேயரைப் பணிகுவோமே

12. கௌரவர்கள் படை அழித்து அருச்சுனர்க்கு மனம்

கலங்காது கீதை தனை உரைத்த மாய ராமன்

பரமாரி முப்புரத் தோரைக் காக்கும் ஸ்ரீ

பச்சைமால் சங்கு சக்கர சிறினிவாச ராமன்

தூப மணி மாலை மார்புடைய ராமன்

சுந்தஞ் சேர் யசோதை புத்திர ரகு ராம ராமன்

பவள முகில் மேனியனாய் நெடியோனான ஸ்ரீ

பஞ்சமுக ஆஞ்சநேயானை பணிகுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அக்கரையூர் வச்சிக்குடா கோயில் கொண்டாய்
அடியவர்க்கு திருக் கருணை வழங்க வந்தாய்
செக்க நிற மதிரை தனில் நீ உதித்தாய்
திருமகளாம் லெட்சுமியை அருகில் வைத்தாய்
முக்கனிகள் விரும்புகின்ற மூசிக வாகனனை உன்
முன்னாடி அருகில் வைத்தாய் ஆஞ்சநேயா
திக்கெங்கும் உன் நாமம் விளக்கச் செய்வாய் ஸ்ரீ
ராமா ஜெய அனுமந்தா போற்றி போற்றி

14. போற்றி ஜெய ராம ஜெய ராம தூதா உன்தன்
பொன் மலர்கள் இணையடி தாழ் போற்றி ஐயா
ஆற்றல் கொண்டு பௌர்ணமியில் அடியார் நாங்கள்
ஆஞ்சநேயா உன் புகழைப் பாடி நித்தம்
போற்றுகின்றோம் புண்ணியனே இருகை கூப்பி
புகழ் நிறை வாழ்வளிப்பாய் மனமகிழ்ச்சி பொங்க
வேற்றுமைகள் அகன்றோட வினைகள் மாள
விண்ணவர் கோன் கண்மணியே போற்றி போற்றி

15. போற்றி போற்றி ஆஞ்சநேயா போற்றி போற்றி
புகழ் தந்த முருகேசு சித்தர் தாழ்கள் போற்றி
ஏற்றமிகு ஆஞ்சநேய சுவாமி ராம்ஜி பாதம்
என்னாளும் போற்றுகின்றோம் அருள் உண்டாக
தோத்தரித்தோர் நிலமளித்தோர் ஆஞ்சநேயருக்கு
தொண்டு செய்தோர் உவந்தன்னம் இட்டோருக்கும்
வாழ்கையிலே மாருதியும் பல மாற்றம் முன்னேற்றம் தந்து
மடிந்த பின்னும் வைகுந்த மோட்சமாமே

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாருதி மந்திரம்

பூத்திசாஸ் நிகாத் நஹி ஆவேன்

மகாவீர் ஜட் நாம் சுனாவே

## ஆஞ்சநேயர் மந்திரம்

ஓம் ஸ்ரீ உத்தரமுகே ஆதிவராகே

பஞ்சமுகி அனுமந்தே லம்லம் லம்லம்

னகல சம்பத் கறாய ஸ்வாகா

## அனுமாரின் மந்திரம்

ஓம் ஹரி ஹரி ஆதி நாராயணா அகிலாண்ட நாயகா

நமோ நமோ என்று அனுதினம் ஓதும் அனுமந்தா

இலங்காபுரி ராவணா சஞ்சீவிராயா ஓடிவா

உக்கிரமாகவே ஓடிவா அடுத்து எதிரியால் வரும்

பில்லி சூனியம் பேய் பிசாசு பிரமராட்ஷஷிகளை

பிடிபிடி அடிஅடி கட்டுகட்டு வெட்டுவெட்டு

கொட்டுகொட்டு தாக்குதாக்கு ஓம் ஆம் இளைய

அனுமந்தா வாவா சுவாகா

இந்த மந்திரத்தை ஐந்து முறை திருநீறு மந்திரித்து தன்னைச் சுற்றி தூலிக் கொண்டால் எந்த எதிர் ரேத்தும் நம்மை தொடாது.

## லோக வசிய மந்திரம்

ஓம் றீயும் ஸ்ரீயும் ஐயும் கிலியும்

சவ்வும் வயநமசி சர்வ லோக

வசிகராய சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமன் வெட்டு

ஓம் நாராயண தூதா நமோ நமோ அனுமந்தா
பரமதயாபரா மண்ணவர் சகாயா.
விண்ணவர் வரங்கள் வேண்டிப் பெற்றவா
உன்னை அழைத்தேன் ஓடிவா மாருதி .
இங்கே நின்று என்முகம் பார் வஞ்சனை பில்லி மண்கீழ் வைத்த
சூனியம் செய்தவன் தூர நிற்கிறான் பிடிபிடி அனுமன் பிரமன் ஆணை
சிவசிவ சங்கர சிவனின் ஆணை அடிஅடி கடிகடி ஆவேசம் கொண்டு
வெட்டு வெட்டு வீரவாள் தன்னால் கட்டுத் தடையற காண்டீபத்தால் அடி
அல்லறங்க உன் அன்னை மீதாணை
அறுஅறு தெறிதெறி அனுமந்த தேவா
இந்தா உன்னாணை கொண்டு ஓங்கி வெட்டினேன்
தடையறமுறிய வேசுவாகா.

## ஆஞ்சநேயர் மந்திரம்

'பிஸ்மில்லா ஹிர் ரஹ்மான் இர் ரஹியர் அதாதல
பிகேபர், சைதினாகு பூதுகுபர் - ஜாது மஹாகுபர், அநு
மன்கே கோட்டி சேபர் , நீலாஜேடா பிலாஜோடா, சல்சல்
பேன் , அனுமான் தேரேசக்தி குருவுராம் பக்திராம், சௌ
கோட்டி சவுமுநாபர் தாயா துஷ்மன்கே பீட்மாபர்' இதை
108 முறை ஜெபித்து மஹா நைவேத்தியம் வைத்து பூசிக்க.

**சகல பேய் பிசாசுகளையும்**
**முனிகளையும் ஓடச்செய்யும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# மாருதி கும்மிப் பாடல்

## தரு

தந்தனத் தான தன தானா தன
தான தந்தனத் தானா
தனதான தந்தனத் தானானா
தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தானானா தன
தான தந்தனத் தானானா

## கும்மி

01. குஞ்சரக் கன்றே குணநியே வெள்ளைக்
கோடு கையேந்தும் அருள் நிதியே
நெஞ்சில் அமர்ந் தருள் தந்திட வாருமென்
நிர்மயனே தண்டைக் காலையனே-உமை
தன் மகனே சிவன் முன் மகனே

02. வெஞ்சினத் சூரரை வென்றவனே வடி
வேலவனே திருமால் மருகா
அஞ்சலன் றுன்னையே தஞ்சமடைந்தேனே
ஆறுமுகா சிவ சண்முகனே சாமி
வேல்முருகா சிவ சண்முகனே

03. சண்முகனைப் பெற்ற தாயாரே சிவ
சங்கரியே உமை அம்பிகையே
உன்னருள் கொண்டு இப்பாடலும் ஓங்கிட
ஓடிவா தாயாரே மாரியம்மா எங்கள்
ஊரில் உறைந்திடும் காளியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. காளிங்கன் பஞ்சணை பள்ளி கொள்ளும் வண்ணக்
கண்ணனே யாதவா வெங்கடேசா
கோவுகள் மேய்த்திடும் மாதவனே கண்ணா
கோபாலனே வண்ணக் கோகுலனே வாரும்
கோதை யசோதையின் பாலகனே

05. வெண்நீறு சாம்பலைப் பூசியவா சிவ
சம்போ சங்கர மா தேவா
உன் அவதாரமாம் மாருதி மேல் பாட
ஓம் உமை பாகனே காருமைய சாமி
ஓம் சிவ சங்கரா வாருமையா

06. கேசரி அஞ்சலை தன் தவத்தால் சிவன்
கிருபை கொண்டு மனந்தான் மகிழ்ந்து
வானவர் தேவர்கள் போற்றும் மகனென்று
மாங்கனி அஞ்சலை கைகொடுத்தார் சிவ
சங்கரன் அம்சமாய்த் தான் பிறந்தார்

07. பிறந்தனர் ராமரொடு நால்வர் அயோத்தி
பேரரசன் தசரதன் தன் தேவிகளால்
அறம் திளைத்திடும் அந்த நாள் வேளையில் அனு
மானும் அவதாரமானாரே ஸ்ரீ
ராமரின் தூதர் பிறந்தாரே

08. மார்கழித் திங்கள் வளர் நாளாம் செவ்வாய்
மாசறு மூல நட்சேத்திரமாம்
பாருலகோர் களும் போற்றும் மகாபல
சாலி அனுமனுமே பிறந்தார் தேவர்
மாரிமழை போல் மலர் சொறிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பாலப் பருவத்தில் மாருதியும் கொடிய
பாதக ராட்சதனை வதைத்தார்
மேலான அன்பொடு தாய் தந்தை மற்றோரை
மிக்கவும் நேசித்து வாழ்தாண்டி ஜெய
ராமரின் தூதனைப் பாருங்கடி

10. பாருளோர்களும் போற்றும் பரந்தாமன் நீல
பச்சை மால் மீது நல் பாசம் கொண்டோர்
வேருடன் மரமாகி நின்ற அசுரரை
வெட்டி முறித்து எறிந்தான்டி வாலால்
சுற்றிப் பிடுங்கி எறிந்தான்டி

11. மாங்கனி தானென்று சூரியர் தன்னையும் மிக
வாஞ்சையாய் நாரதர் சொற்படிக்கு
பற்றிப் பிடிக்க எழுந்தாண்டி வானில்
சுற்றி உலகை அளந்தாண்டி தேவர்
போற்றிப் புகழ்ந்திட வந்தான்டி

12. தாய் அவள் சொல்லையும் தட்டிவிடான் மிக
தாடாண்மை கொண்டோரை ஆளவிடான்
மாயை இருள் தனை போக்கி வைப்பார் நல்ல
மாதரை தெய்வமாய் போற்றிடுவார் அனு
மானனெனும் ராசனைப் போற்றுங்கடி

13. வச்சிரத் தேகத்தைக் கொண்டவராம் பெரும்
வானர ராசனின் தன் மகனாம்
உச்சிதமான தோர் தெண்டா யுதத்தோடு
ஓடி வாறதைப் பாருங்கடி இவரை
நாடிப் போற்றுவோம் வாருங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. காதினில் குண்டலம் தூங்கிடுமாம் தேக
கழுத்தில் மாலை ஒளி விடுமாம்
பொன் தேகத்தில் நல்லொளி வீசிடும் புயம்
ரெண்டிலும் நின் தசை தொங்கிடுமாம் தொடை
ரெண்டிலும் ரோமங்கள் மிஞ்சிடுமாம்

15. பால்குடம் நூற்றைக் குடித்தவன்டி பல
ராட்சதர் தன்னையும் வென்றவன்டி
வால் நீடு கொண்டு வளர்த்தவன்டி நல்ல
வானர தாசனின் தன்மகன்டி இங்கு
வாறவடி வதைப் பாருங்கடி

16. ராமரின் நாமத்தை கூறிக் கொண்டார் வலம்புரி
சங்கினின் ஓசையும் கேட்டுக் கொண்டார்
ஆசையாய் பால் தயிர் அன்னமுண்டான் ராஜ
அனுமானும் வாறதைப் பாருங்கடி நல்ல
அஞ்சனை மைந்தனைப் பாருங்கடி

17. தாவிக் குதித்து கடல் கடந்தான் லங்காப்
பட்டணம் எங்கணும் சுற்றி வந்தான்
வேந்தனாம் ராவணன் கோட்டை கண்டான் பல
வீரரைக் கண்டு ஒளித்துக் கொண்டான் சிறு
வானரம் போலவும் மாறிக் கொண்டான்

18. மெத்தப் பதுங்கிலே தாவிக் கொண்டான் கோட்டை
மேலாகச் சென்றே இறங்கிக் கொண்டான்
எத்தனை கோட்டைகள் தேடி வந்தான் சீதை
இருக்கும் இடம் தனைக் கண்டு கொண்டான் பெண்கள்
சுற்றி இருப்பதைக் கண்டு கொண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. திரிசடை சீதைக்கு புத்தி சொல்வார் உந்தன்
நாயகர் உந்தனை மீட்டுச் செல்வார்
பரிவுடன் கனவு பலிக்கு மென்றார் இந்தப்
பட்டணம் பற்றி எரியுமென்றாள் லங்காப்
பட்டணம் பற்றி எரியுமென்றாள்

20. பேசின பேச்செல்லாம் கேட்டிருந்தான் சீதை
பொன்முகம் வாடலைப் பார்த்துக் கொண்டான்
நாச்சியர் தூக்கமும் ஆனபின் தூதனும்
நான் கண்டேன் சீதையை ராமாவென்றான் ஸ்ரீ
ராகவா சீதையைக் கண்டேனென்றான்

21. யாரும் அறியாத வேளையிலே அன்னை
சீதையர் தன்னோடு பேசிக் கொண்டான்
ராமரின் தூதன் நான் அம்மா என்றான் கணை
யாழி தன்னையும் கை கொடுத்தான் சீதை
கண்மணி தன்னிலும் ஒற்றிக் கொண்டாள்

22. என்னலம் பற்றியும் கேட்டுக் கொண்டார் இது
உண்மை தான் உன்னை அறிந்தேனென்றாள்
தன் மடி தன்னில் இருந்த சூடாமணி இதை
இராகவன் தன்னிடம் காட்டுமென்றாள் சீதை
இச்சிறை மீளா திறப்பேனென்றாள்

23. நம்பிக்கை கொண்டேன் உன்னிடத்தில் வெகு
என் பிரான் வந்தெனை மீட்கச் சொல்லு
துன்பமடைகிறேன் அன்ப நீ என்றென்றும்
என்றும் சிரஞ்சீவியாக வாழ்வாய் பாரினில்
என்றும் சிரஞ்சீவியாக வாழ்கவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. அன்னையும் ஆசியும் பெற்றுக் கொண்டான் ராஜ
அனுமன் நான் வெற்றி அடைந்தேன் என்றான்
உண்மை தான் ராமர் உனை மீட்டுச் செல்வார் தாயே
ஒன்றுக்கும் அஞ்சாதே அம்மா என்றார் நீர்
ஒன்றுக்கும் அஞ்சாதே தாயே என்றார்

25. வாழ்க அனுமனே பல்லாண்டு உன்
வங்கிசம் மென்மேலும் வானுயரும்
ஆள் புவி ராமனின் அன்பொடு பாசமும் என்
ஆசியும் தந்தேனே ஆஞ்சநேயா நீடுழி
வாழ்க நீ மாருதி இவ் வையத்திலே

26. வையகம் போற்றி எம் வானரசானும் இவர்
வாழ் தலம் எங்கும் அருள் ஓங்கிடவே
ஜயன் ரெகு ராமன் அன்னையர் சீதையும் அயோத்தி
தன்நகர் வாழ்க எனப் போற்றுகின்றேன் ராமா
இன்பமுடன் உம்மை போற்றுகின்றோம்

27. போற்றி அனுமனின் பாடலைத் தந்திட்ட நம்
புலவர் விநாயகர் மூர்த்தியடி
நாற்றிசை எங்கணும் போற்றும் ராமாயண
சுந்தர காண்டத்தில் ஓர்பகுதி இதை
அன்புடன் பாடுக நண்பர்களே

28. அன்பு மிகக் கொண்டோம் ஆஞ்சநேயா உன்முன்னே
ஆடிக் கைகொட்டியே பாடுகின்றோம்
கண்எதிர் காட்சியைக் காட்டாயோ மக்கள்
கண்டு உனைப் போற்றிட வாராயோ ராம
தூதனே அன்புடன் வாராயே.

29. அன்புடன் உன் தாழ் சரணமையா உன்தாய்
அஞ்சனை அன்னைக்கும் மாருதியே
தந்தையர் கேசரி சிந்தை மகிழ்ந்திடும் தேவர்
முந்தைய மூவர்தாழ் சரணமதே எங்கள்
இராமதூதன் தனக்குமே தாழ் சரணம்

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் உடல்கட்டு மந்திரம்

ஓம் வினாயக உத்தண்டவினாயகா மூசிகவாகனா மூலாதார மோகனா-சித்திரூபா பீசாட்சர தீபா அம்பிகைபாலா அசுரர் புத்தி சீலகா சிவன்மகிழ் பாலகா ஓம் பிரணவங்களின் கனாயா சதங்கை அணியும் பொற்பாதா, சகலலோகநாதா சடாட்சர ஜீவாதாரா அடியேன் குறையை அகற்றிட வருவாய். விக்னேஸ்வரா கட்டு கட்டு கசடறக்கட்டு மதியைக் கட்டு கரங்கள் இரண்டையும் கஜமுகாகட்டு கால்கள் இரண்டையும் கணநாதாகட்டு முதுகையும் கழுத்தையும் மூசிக வாகனா கட்டு முகத்தையும் மனதையும் மூலதாராகட்டு கணுக்கால் முழங்கால் கனத்துடை இரண்டையும் கடுகெனக்கட்டு விழியுடன் வாயையும் விக்னேஸ்வராகட்டு வலஇட மணிக்கட்டையும் இனிதுடன் கட்டு கழுத்தைக் கரத்தை கணபதிகட்டு எதிரிகளாலே என்னைத் தொடராமல் பகைவனின் மந்திரம் பார்த்திடாமலே பக்கத்திருந்து பாசாங்குசதரா பட்சமாய் கட்டு கட்டு பரமன் மகனே பரிந்து கட்டு பாவம் பொடிபட பட்சமாய்க் கட்டு சுவாகா.

## ஆஞ்சநேயர் வசிய மந்திரம்

ஓம் காம் அனுமந்தா ஓங்கார அனுமந்தா
ஆங்கார அனுமந்தா உகார மகார அனுமந்தா
கேசரி அஞ்சனா தேவி புத்திரா அரிராம தூதா
அகோர வீரா அம் இம் ராம் ராம் அனுமந்தா
வருக வருக வசிவசி சுவாகா

## காய்வெட்டு மந்திரம்

ஓம் நம்மா பகவதே ரகுவம்சத்த நயா சீதாவல்ல பாயா
ஜெய ஜெய ஆனுமந்தா கம்சல் யாரத் நகர்ப்பாயாணேராமா
கோராமதூதா அனுமந்தா விஸ்ணு சந்தா ஆங்கார வேகமும்
அஸ்ட லோகமும் கொண்ட பாதாள அஞ்சனமும்
பறந்தோட வாதாடு வாதாடு வைரவா இவர் முன் எதிர்த்தவனை
ஜெயவீரா நாராயணா சர்வேஸ்வரா வாவா ஆவேசு
ஆவேசு ஓம் சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## சக்தி காயத் திரி

ஓம் ஐயும்கிலியும் விசுத்தியுன் மகேவாகு வேகுதாய திமிகி கண்ணோற்
ஐயும் சக்திப் பிறசோதையாதுா
ஓம் கிலியும் தேவி காயாஸ்திரி சந்த ஈஸ்பரி தேவதாம்

## இ. வெட்டு

ஓம் ஆம் உம் நம்நம் சிங்சிங் உங்ங வங்ங றிங்ங சிறிங்ஙா வாவா காலகால தெண்டாயித தட்சணா வாவா என் சத்துரு உயிர் பதறப்பதற இடிஇடி இயமா அம் நம் இல் உல் இவர் மீதில் எரித்த ஏவப் பில்லிக்கு அஞ்சாதே அவன் பெலிக்கு இணங்காதே இவன் கட்டுக்கு நில்லாதே ஆவேசு ஆவேசு ஆதிசிவன் உன்னை எரித் தாற் போலே அவனை எரிஎரி பிடிபிடி அவ்அவ் றிங்மம்மம் மாய மாய சிங் சிங் சிவனாணை அம்அம் ஆதி பரமேஸ் பரியானை ஓம் சிறி கணபதியாணை அரி அரி ஆதியாணை எரிஎரி இளைய பெருமாளாணை அரிஅரி ரசிரசி சித்த சங்ஙார பாஷமும் கொண்டு இத்தடையறு அறு அறுத்துபோக வேசுவாகா

## உ. கட்டு

ஓம் அற்றம் கட்டி பாதாளம் கட்டினேன் பேய் ஏறு பில்லி சூனியத்தையும் பிடிபடக் கட்டினேன் ஆனை கராடி பல மிருகத்தையும் வாய் திறவாக் கட்டினேன் முன்னே ஆதி பின்னே அங்குச பரமேஸ்பரியாக் கொண்டேன் என் உச்சியில் சொர்ணாக் கரசனாகக் கொண்டேன் தும்பிக்கை அம்பிக்கை அங்குச ஆதிபரமே ஸ்பரராணை இக் கட்டு எம் பெருமானாணை நிற்க நிற்க வேசு வாகா.

## அ. போ. மந்திரம்

ஓம் சக்தி ஆ.ஈ இவள் நாவு தாமரைப் பொய்கை யாக நிற்க வேசுவாகா
ஓம் ஆதி ஆனந்த நாயகி ஓம் ஆதிமகமாரி வாங்கு வாங்கு
ஓம் வல்லி தில்லி வல்ல காமாட்சி நிற்க நிற்க வேசு வாகா

ஓம் வீரா அகோர வீரா நரசிங்க சிவாய நம
ஓடப்பா ஓடு

குறிப்பு :- அன்பர்களே முன் சக்தி காயத்ரி மந்திரமும் இரண்டாவதாக இயமன் எதிரேற்று வெட்டும் மூன்றாவதாக தன் உடல் கட்டு மந்திரமும் நான்காவதாக வேல் அலகு போடு மந்திரமும் ஐந்தாவதாக திரு நீறு அணியா தோருக்கு ஒன்பது முறை ஓதித் நீற்றை ஊதி விட கசல கண்ணிறு காச்சல் பல உடல் வாதை என்பன நலமாகும் என்பதனைத் தாங்கள் நன்கு அறிந்து தெரிந்து செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமந்திரம்

'ஓம் ஓங்கார ஸ்ரீரங்கா, ரீங்காரா அஞ்சனாதேவா வா வா வாயு புத்திரா வாவா , ராஜ அனுமந்தா வா வா தாரு தாரு , காரு காரு, சர்வப் பூதப்ரேத பிசாசு இருள் காட்டேரிகளைப் பிடிபிடி, அடிஅடி , குத்து குத்து , கொல்லு கொல்லு, நிர்த்தூளி செய், உதிரங்குடி மாறுமாறு மார்பைப் பிளந்து குடலைப் பிடுங்கி ரங்ரங் லலலிலி ரம்ரம் உன் தாயார் சீதாதேவி, உன் குருசாமி, ராமதூதா லங்காபுரி ராவண சம்மாரா, அஞ்சனாதேவி உன்மேல் ஆணை ஓடிவா, சீதாதேவி ஆணை வாவா, ராமசாமி ஆணை வாவா, உன்னைப் படைத்த பரமசிவன் பாதத்து ஆணை ஓடி வாவா , ஓம் றீயும் ஸ்ரீயும் அம்,உம் யநமசிவ வசிய வசிய சிவய அனுமந்தா சீக்கிரம் ஓடிவா, ஐயுங் கிலியும் சௌவும் ஆக்ருஷண ஓடி வா சிவா யநம உரு 108.

### சகல பேய் பிசாசுகளையும் முனிகளையும் ஓடச்செய்யும் ஆஞ்சநேயர் எந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வ<br>அ | சி<br>னு | ந<br>ம | ம<br>ற் | ய<br>தா |
| ந<br>அ | ய<br>னு | வ<br>ம | சி<br>ந் | ம<br>தா |
| சி<br>அ | ம<br>னு | ந<br>ம | ய<br>ந் | ல<br>தா |
| ய<br>அ | வ<br>னு | சி<br>ம | ம<br>ந் | ந<br>தா |
| ம<br>அ | ந<br>னு | ய<br>ம | வ<br>ந் | சி<br>தா |

இந்த யந்திரத்தை ஒரு செப்புத் தகட்டிலோ விபூதியிலோ பதித்து , சுத்த பூஜை, தூபதீபம் காட்டி மகாநைவேத்தியம் செய்து , சித்தசுத்தமாக ஒரு மண்டலம் இருந்தால் , மந்திரம் சித்தியாகும். இதனால் எல்லாப் பூதம் பிசாசு - முனிகளும் பூஜை விபூதியாலும் ரக்ஷையாலும் விலகிப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஸ்ரீராமஜெயம்

## மங்களம்

மங்களமாம் மங்களம் மாருதிக்கு மங்களம்
எங்கள் ராம தூதனான இளவலுக்கு மங்களம்

அஞ்சனையின் புதல்வனாம் அனுமனுக்கு மங்களம்
ஆதிதேவ லோக மாளும் அரிகரிக்கு மங்களம்
வெஞ்சினத்தை வேறறுக்கும் வீரதீரனுக்கு மங்களம்
வெகுளிமாய்கை போக்குவிக்கும் வீர மாருதிக்கு மங்களம்

மங்களமாம் ...

கேசரியின் நந்தனான கிரிடியற்கு மங்களம்
கேது சனி தோசம் போக்கும் கிரிடர்ற்கு மங்களம்
ராமர் சீதை இதயம் வைத்த ரகுபதிக்கு மங்களம்
தருமம் நீதி கொடையளிக்கும் ராஜ மாருதிக்கு மங்களம்

மங்களமாம் ...

வாம லோக தேவர் போற்றும் வாயு புத்திரற்கு மங்களம்
வரும் பகையும் தீமை மாய்க்கும் வானரற்கு மங்களம்
ராம நாமம் பாடும் எங்கள் சிரஞ்சீவியற்கு மங்களம்
சகலகலா சோதியான ராஜ குமாரனுக்கு மங்களம்

மங்களமாம் ...

தினம் தினம் ஓர் உருவை மாற்றும் செம்மலுக்கு மங்களம்
திகழும் கதாயுதம் முடைய திருவீரனுக்கு மங்களம்
தங்க நிற மேனி கொண்ட தரும சீலனுக்கு மங்களம்
தரும நீதி கொடையளிக்கும் அனுமனுக்கு மங்களம்

மங்களமாம் ...

சித்தர் குரு முருகேசு சுவாமியற்கும் மங்களம்
சீரடியார் ஆஞ்சநேய ராம் ஜீ சுவாமியர்க்கும் மங்களம்
அன்பு கொண்டோர் மனத்துறையும் அனுமனுக்கு மங்களம்
அவர்கள் அறப்பணி உயரடைய அவனி போற்ற மங்களம்

மங்களமாம் மங்களம் மாருதிக்கு மங்களம்
எங்கள் ராம தூதனான இளவலுக்கு மங்களம்

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பின் உரை

அன்பர்களே,

அடியேன் பல திருத்தலங்கள் சென்று புத்தக விற்பனை செய்வதுண்டு. அந்த வகையில் உகந்தைப் பதியிலும் அடியேன் இருக்கின்ற போது பல முறை தங்களிடம் கூறிவருகின்றேன். மறந்து விட்டீர்களா? எல்லாத் தெய்வங்கள் மீது பாடல் புத்தகங்கள் இருக்கின்றதே ஏன் ஐயா ஆஞ்சநேயர் மீதிலும் ஓர் கும்மிப்பாடல் பாடி தாங்களேன் எனக் கூறி யாத்திரை சென்று விட்டார்.

அவ்வடியார் கூறிய வார்த்தை என் மனதில் ஆளமாகப் பதிந்து விட்டன. தொண்டன் முத்திலிங்கத்திடம் தம்பி நாளை அக்கரைப்பற்று செல்வோம் என அடுத்தநாள் அங்கு சென்றோம்.

அங்கு எமது அண்ணரின் மைத்துனர் வேலாயுதம் எங்களை வரவேற்று கோயிலுக்கு கூட்டிச் சென்றார். அன்று பூசையில்லாத நாள் ஆகையால் இருந்தபடியால் கந்தசாமி அங்கிள் என்பவரைக் கண்டு நாங்கள் வந்த காரியத்தை கூறலானோம். ஓர் பூரணைக்கு வாருங்கள். உங்கள் காரியம் சித்தமாகும் எனக் கூறித்தன் மாணவனிடம் புத்தகங்கள் இருக்கும் இடத்தைச் சொல்லி எங்கள் இருவருக்கும் மூன்று மூன்று புத்தகங்கள் தந்தார் பெற்றுக் கொண்டு அஞ்சநேயரையும் தரிசித்து விட்டு வந்து விட்டோம்.

மீண்டும் பூரணையில் ஓர்நாள் அடியேனும் மகன் சிவகுமாரும் அங்கு சென்றோம். கூட்டுப்பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தன. நாமும் பங்கு பற்றி பூப்போட்டு அன்னம் பாலிப்பிலும் பங்கு பற்றி எழுந்த போது எனது ஒன்று விட்ட அண்ணர் இரா.நல்லதம்பி அன்னரின் மக்கள், மருமக்கள் பல அடியார்களுக்கு அறிமுகம் செய்தனர். அண்ணரோடு அடியேன் மதிரையடிப் பூமியை துப்பரவு செய்து கொடுத்ததுண்டு. அண்ணர் இறந்த பின் மக்கள் உறவு மந்த நிலையாக வரலாயின. அன்று எனைக் கண்ட அண்ணரின் மகள் ஜானகி அம்மா பல ஆண்டுக்குப் பின் எங்கள் சித்தப்பா வந்து இருக்கிறார் என்று ஆரத்தளுவி அன்பு சொரிந்தார். அண்ணரின் மக்கள் மருமக்களுக்கு சித்தர் முருகேசு சுவாமி திருவருளும் ராம்.ஜி.சுவாமியின் கருணையும் ஆஞ்சநேயர் அருள் கொடையும் பெருக வேண்டிக்கொண்டு விடைபெற்றோம்.

அடியார்களே,

ஆஞ்சநேயரின் அகவல் பாமாலை கும்மிப் பாடல்களைப் பாடி பஞ்சமுக அஞ்சநேயரின் திருப்பாதம் பணிவோமாக.

- வணக்கம் -

அன்புடன்

**இறைபணியாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர் நா. விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

### ஆக்க தொகுப்பு நூல்கள் :



| | |
|---|---|
| 1. குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் | 350.00 |
| 2. சிவமுத்து மணிமாலை | 180.00 |
| 3. காளியம்மன் காவியம் கும்மிப்பாடல்கள் | 180.00 |
| 4. பேச்சியம்மன் காவியம் கும்மிப்பாடல்கள் | 175.00 |
| 5. நரசிங்க வயிரவர் காவியம் கும்மிப்பாடல்கள் | 185.00 |
| 6. நவக்கிரக வழிபாடும் (பரிகாரங்களும்) | 190.00 |
| 7. மடப்பிட்டி மீனாட்சி அருட்பாமாலை கும்மிப்பாடல்கள் | 150.00 |
| 8. நாகம்மை புகழ்மாலை | 135.00 |
| 9. வராகி மாலை | 350.00 |
| 10. ஆஞ்சநேயரின் அருட்பாமாலை | 185.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழவரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்.

**ஈஸ்வரி இல்லம்**
**மாரியம்மன் கோயில் வீதி,**
**சேனைக்குடியிருப்பு-01B.**
077-6538667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org